DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No. 216/2022 |
| Session | ... | |
| | | Prosecution / PW-2 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.சசிக்குமார் |
| Father's Name (or) Husband Name | : | த/பெ.சுப்பிரமணி |
| Village | : | வ.பரமக்குடி |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused absent U/s.317 Cr.P.C petition filed heard and allowed.)

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 15.05.2024

---

**முதல் விசாரணை**

1. நான் வ.பரமக்குடியில் வசித்து சிவில் இன்ஜினியராக வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 ஐ எனது மனைவி ஆவார். எதிரியை எனக்கு தெரியும்.

2. சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பு தேதி, மாதம் நினைவில் இல்லை. நான் வழக்கம்போல் என் பிள்ளைகளை பள்ளியில் இருந்து அழைத்துக்கொண்டு வீட்டுக்கு வரும்போது இரவு 09.30 மணியளவில் எனது காரில் மனைவி பிள்ளைகளுடன் வந்தேன்.

3. வரும் வழியில் எதிரி அவரது இருசக்கர வாகனத்தை நிறுத்திக்கொண்டு எங்களை போக விடாமல்வழி மறித்தார். நான் ஆரன் அடித்து விலகுமாறு சொன்னேன் எனது மனைவி, பிள்ளைகளும் காரில் இருந்து இறங்கி வீட்டுக்கு செல்லும்போது எதிரி என்னை பிறப்பு உறுப்புகளை பற்றி அசிங்கமாக பேசினார்.

4. அப்போது எனது மனைவி திரும்பி வந்து கேட்டபோது எதிரி எனது மனைவியிடம் தவறான தொழில் செய்து தானே பிழைக்கிறீர்கள் வசதியாக உள்ளீர்கள் என்று சொன்னார். அதற்குள் கூட்டம் கூடி விட்டார்கள். பின்னர் எனது மனைவி 100 க்கு போன் செய்து தகவல்சொல்லி போலிசார் வந்தார்கள்.

5. மறுநாள் காலை எனது மனைவி ஆர்.எஸ்.மங்கலம் காவல் நிலையம் சென்று நடந்த சம்பவம் தொடர்பாக புகார் அளித்தார். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் தனியாக வீடுகள் எடுத்து கட்டுமான தொழில்செய்து வருகிறேன் என்றால் சரிதான். எனது மனைவி செட்டியமடையில் மளிகை கடை மற்றும் ஐஸ்கிரிம் பார்லர் வைத்து நடத்தி வருகிறார் என்றால் சரிதான். மேற்படி இரண்டு கடைகளையும் எனது மனைவி தான் நடத்தி வருகிறார்.

2. எங்கள் ஊர் வ.பரமக்குடி யிலிருந்து செட்டியமடைக்கு சுமார் 4.5 கிலோ மீட்டர்துாரம் இருக்கும். தினமும் நான் அவரை அழைத்து வந்து விட்டுவிட்டு பின்னர் செல்லும்போது அழைத்து செல்வேன்.

3. எனது வேலைக்கு குறிப்பிட்ட நேரம் கியைடாது. அவ்வப்போது சென்று சைட் பார்த்து வருவேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று நான் எனது மனைவியுடன் கடையில் இருந்தேன். பொதுவாக கடையை இரவு சுமார் 09.00 மணியளவில் கடையை அடைத்து விடுவோம்.

4. செட்டியமடையில் இருந்து எங்கள் ஊருக்கு காரில் சென்றால் சுமார் 15 நிமிடத்தில் சென்றுவிடலாம். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் எங்கள் வீட்டில் இருந்து ஐம்பது வீடுகள் தள்ளி இருக்கும். எங்கள் ஊர் கிராமம் என்றால் சரிதான்.

5. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் சம்பவ இடத்தில் ஆள் நடமாட்டம் குறைாவான இருந்தது என்றால் சரிதான். நான் காரில் எனது மனைவி, பிள்ளைகளை காரில் கூட்டி சென்ற காரை நிப்பாட்டி இறக்கி விட்டுவிட்டேன் என்றால் சரிதான்.

6. எதிரியும் நானும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். வழக்கின் எதிரி வீட்டிற்கும் எங்கள் வீட்டிற்கும் சுமார் அரை கிலோ மீட்டர் துாரம் இருக்கும். எதிரி வீட்டிற்கு செல்ல வேண்டும் என்றால் மெயின்ரோட்டில் சென்றுவிடுவார். எங்கள் வீட்டு பக்கம் வர வேண்டிய வேலை இல்லை என்றால் சரிதான்.

7. எங்கள் குடும்பத்திற்கும் எதிரி குடும்பத்திற்குட்ம ஏற்கனவே முன்விரோதம் உண்டா என்றால் இல்லை எந்தவித பிரச்சனையும் இல்லை. ரோட்டில் எனது மனைவி, பிள்ளைகளை இறக்கிவிட்டு காரை நிப்பாட்டிவிட்டு, இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு வீட்டிற்கு வருவேன்.

8. காரை நிப்பாட்டும் இடம் எங்கள் ஊரிலேயே ஒரு இடத்தில் உள்ளது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும்போது நான் எனது மனைவி உடன் இருந்தேன் என்றால் சரிதான். நான் சொன்னது போல சம்பவம் நடைபெறவில்லைஎ ன்றால் சரியல்ல.

8. எதிரி மீது தொழில் போட்டியால், காழ்ப்புணர்ச்சியால் நான் எதிரி மீது புகார் அளிக்காமல், எனது மனைவியை வைத்து வேண்டும் என்றே திட்டம் தீட்டி பொய்யாக புகார் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. அ.சா.1 மறுநாள் காவல் நிலையம் புகார் அளிக்க அ.சா.1 சென்றபோது நான் அவருடன் செல்லவில்லை. எனக்கு வேலையாக இருந்ததால் அவருடன் செல்லவில்லை.

9. நான் சொன்னது போல சம்பவம் நடைபெறவில்லை என்பதால் நான் காவல் நிலையத்திற்கு செல்லாமல் எனது மனைவி மூலம் எதிரி மீது இந்த பொய் புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

10. நான் சொன்னதுபோல, சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றாலும் எனக்கும் எதிரிக்கும் உள்ள தொழில் போட்டியின் காரணமாக எனது மனைவி மூலம் எதிரி மீது பொய்யாக புகார் அளித்து அதன்பேரில் அ.சா.1 ற்கு ஆதரவாக பொய்யாக

சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் இல்லை. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.